# முன்னுரை

மனித வாழ்வை செம்மைப்படுத்துவதற்கான முயற்சிகள் உலகம் தோன்றிய காலந்தொட்டே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இயற்கைச் சீற்றங்கள் மனிதருக்கு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உணர்வை வலுப்படுத்தின. தம்மைக் காத்துக்கொள்வதற்காக இயற்கையோடு போராடிய மனித இனம், நாளடைவில் தமக்குத்தாமே உருவாக்கிக் கொண்ட செயற்கைத் தாக்குதல்களிலிருந்தும் தம்மைத் தற்காத்துக்கொள்ள இடைவிடாது முயன்று வந்ததை வரலாற்றின் நெடுகக் காணலாம். உயிர்களின் பரிணாமக் கொள்கையை வகுத்த சான்றோர், ‘‘உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் தன் நிலைபேற்றிற்கு ஓயாது போரிடுதலும் அப்போரில் வலிமை மிகுந்தவை எஞ்சுதலும் இயற்கை’’ என்னும் நிலைப்பேற்றுச் சட்டத்தை நிறுவிக்காட்டியதை இங்கு நினைவு கூர்தல் பொருத்தமாக அமையும்.

வலியவரின் ஆக்கிரமிப்பு மற்றும் ஆதிக்கத்திலிருந்து வறியவரான எளியவரைக் காக்கவேண்டும் என்கின்ற விழைவு காலப்போக்கில் மனிதக் குழு அமைப்பில் மூழ்கியது. பலவீனங்களின் மொத்த வடிவமான மனிதர் ஒழுக்கம் சிதைந்து, ஒருவரை ஒருவர் வதைத்து மடிந்து போவதைத் தடுத்து நிறுத்திட அக்குழு விரும்பியது. அதன் தொடர்ச்சியாக குழு என்னும் வட்டம் பல்கிப்பெருகி அரசு உருவாகியது. மக்களைக் காத்து நெறிப்படுத்துவதற்கு முனைந்த அரசின் உயரிய விழுமியங்களை நிறைவேற்றிட காவலின் தேவை

உணரப்பட்டது. அவற்றையெல்லாம் ஒருங்கமைத்து மக்களை ஒழுங்குப்படுத்தும் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட காவலர்க்குத் துணை செய்யும் வகையில் சென்னை அசோக் நகர், காவல் பயிற்சிக் கல்லூரி “காவலர் கையேடு” ஒன்றைச் சிறப்பாக வெளியிட்டுள்ளது.

“காவலர் கையேடு” என்னும் இந்நூல் சட்டதிட்டங்கள் அடங்கிய விதிமுறைகளின் தொகுப்பு மட்டும் அன்று, காவலர்கள் தம்மைப்பக்குவப்படுத்திக் கொண்டு மக்களின் காவல் அரணாக விளங்கி மானுடத்தை மகத்துவப்படுத்த வழி செய்யும் கருத்துக் கருவூலமாகவும் அமைந்துள்ளது. மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் காவல் துரையினரின் தன்னலமற்ற தியாகப் பணியை மேலும் செம்மைப்படுத்தி அரசுக்கு உதவிட விழைந்துள்ளமை இக் கையேட்டின் சீரிய சிறப்பு.

அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் அடிப்படை உரிமைகளை இந்திய மக்கள் அனைவரும் பெறுவதற்குக் காவல் துறையினர் ஆற்ற வேண்டிய பணிகளைச் சுட்டிக்காட்டியும், அடிப்படைக் கடமைகளின்படி மக்களைச் செயல்படத் தூண்டுவதில் காவல் துறையினருக்கு உள்ள பொறுப்பினைக் கோடிட்டுக் காட்டியும் விவரிக்கிறது காவலர் கையேடு. நவீன இந்தியாவும் காவலின் பங்கும், மனிதரின் குண நலன்கள் , காவல்துறை அமைப்பு, காவல் நிர்வாகம், காவலர் கடமைகள், பிரதான சட்டங்களான , இந்திய தண்டனைச் சட்டம், குற்ற விசாரணை முறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம், தனி மற்றும் உள்ளூர் சட்டங்கள் , மனித உரிமைகள் மற்றும் பாலினப் பாகுபாடுகளும் பெண்களின் உரிமைகளும் ஆகிய பத்து பெரும் தலைப்புகளில் சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளை வகுத்தும் தொகுத்தும் விவரிக்கின்ற இந்நூல் காவலர்க்குக் கிடைத்த அரிய சிந்தனைப்பெட்டகம்.

சட்டத்தின் நோக்கையும், சட்டம் சார்ந்த மனித வாழ்க்கையின் போக்கையும் மதிப்பிட்டுக் காவலர்க்கு வழிகாட்டும் ஓர் ஒளி விளக்காகவும் காவலர் கையேடு விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை . ஒவ்வொரு காவலர் கைகளிலும் இக்கையேடு தவழ வேண்டும் என்பதே என் அவா.

இந்த காவலர் கையேட்டை தயாரிக்கவும், புதுப்பிக்கவும் காவல் கண்காணிப்பாளர் என்.டி. சிவதாசன் மற்றும் ஆய்வாளர் திரு. ஜி. கருணாகரன் , திரு. வி. பாலகிருஷ்ணன் ஆகியோர் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். அவர்களின் முயற்சியினை நான் மிகவும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

டாக்டர் திரு B. ஸ்ரீகாந்த்
முதுநிலை காவல் கண்காணிப்பாளர்
புதுச்சேரி..